# வாக்தேவி ஸரஸ்வதி அந்தாதி

**(இந்த அந்தாதியை தினம் சொல்லிவருபவர்களுக்கு ஸகலவர்க்கும் குறிப்பாக மாணவ,மாணவியர்க்கு கல்வி ஞானம் அதிகம் கிடைக்கும். தேர்வில் அதிக மதிப்பெண்களுடன் வெற்றி நிச்சயம்)**

பளிங்குடை ரத்னமாய் ஸ்வாதி திருநாளில்
குளிர்தீபம்போல் நீவந்து ப்ரபஞ்ச அவதாரம்செய்ய
கல்வியைத் தருவாயே ஐயங்கள் யாவும் சேர
நாக்கினிலே நீயிருப்பாய் ஜகன்மாதா ஸரஸ்வதியே (1)

ஸரஸ்வதி ஜலமாக நீஓடும் வேளையிலே
நான்காம் நதியாக உன்னையாம் துதிக்கின்றோம்
கங்கா யமுனா கோதாவரி ஸரஸ்வதி
குருவாக நீயிருந்து கல்விதனை எமக்களிப்பாய் (2)

அளித்திடும் சக்திதனை யாவர்க்கும் மேலோங்கி
பரவசமாய் கீர்த்தனம்தான் பாடுவேன் அம்மாஉன்னை
கூப்பிடும் வேளையில் உயர்ந்தோங்கும் எந்நாளும்
தினமும் தொழுவோர்க்கு நலங்கள் சேரும் (3)

சேருமது தடங்கள் வாரா துயரனைத்தும்
நீங்கிடுமே உன்னை தினம் பூஜித்தால்
உன்னை நாங்கள் மறக்க மாட்டோம்
வெண்அல்லி திருநாவில் எம்மை அருள்வாயே (4)

அருள்வாய் எங்களின் கஷ்டங்களைப் போக்கி
ஸகல ஞாலம் எங்களுக்குத் தருவாயே
உன் கடாகஷம் தருவாய் எங்களுக்கு
ஸகல கஷ்டம் போக்கிடுவாய் ஸரஸ்வதி தாயே (5)

தாயேநீ பஞ்சமுக க்ஷேத்ரத்தில் வந்து
எங்கள் பாவம் போக்கிடுவாய் இங்கு
நம்பிக்கையாய் வந்து உன்னை பூஜிப்பவர்க்கு
ஸகல கடாக்ஷம் தருவாய் ஸரஸ்வதியே (6)

ஸரஸ்வதி அந்தாதியை ஸ்மரணம் செய்தால்
உன்அருள் கிடைக்கும் சொல்வோர்க்கு
வரும் கஷ்டங்களை நீ போக்கிடுவாய்
வெண்பத்மவாஸினியே எங்களுக்கு ஞானம் தா. (7)

ஸுபமஸ்து